| TNTH0A0001742024 | **சார்பு நீதிமன்றம், பெரியகுளம்.**<br>முன்னிலை: திரு.S. சந்திர சேகர், B.A. L.L.B.,<br>சார்பு நீதிபதி, பெரியகுளம்.<br><br>2026ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ஆம் நாள்<br>செவ்வாய்கிழமை.<br><br>**அசல் வழக்கு எண்.84/2024**<br><br>**CNR.No.TNTH0A0001742024** |
|---|---|

V.K.S.காமாட்சி ... **வாதி(கள்)**

**// எதிர் //**

N.குமரேசன் ... **பிரதிவாதி(கள்)**

****

இவ்வழக்கானது கடந்த 29.07.2026 ஆம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.R.முருகன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.நாராயணசாமி அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு சாட்சி, சான்றாவணங்கள், வாதுரைகள் கேட்கப்பட்டு, இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த நிலையில் இன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும்.....

## தீர்ப்புரை

பிராது தொகை ரூ.3,84,000/-ம், அசல் ரூ.3,00,000/-த்திற்கு பிராது தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரை மாதம் 1க்கு ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் பின்வட்டியும், பின்செலவும் சேர்த்து வழங்கக்கோரியும், வழக்கு செலவுத்தொகை கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



S CHANDRA SEKAR
Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2026.08.11 17:57:59 +0530

**1. பிராது சுருக்கம் பின்வருமாறு:**

வாதியும், பிரதிவாதியும் ஒரே போக்குவரத்து கழகத்தில் பணிபுரிந்து வந்த அடிப்படையில், இருவரும் நெருங்கி பழகி வந்த நிலையில், வாதியிடம் பிரதிவாதி அவசர நிமித்தம் மற்றும் குடும்ப செலவிற்காக 02.02.2022ல் ரூ.100/–க்கு ரூ.1.00/– மாத வட்டியில் ரொக்கம் ரூ.3,00,000/– வாதியிடம் பெற்றுக்கொண்டு, அதற்கு ஆதரவாக கடனுறுதி சீட்டும், அதே தேதியில் பிரதிவாதியும், அவரது மனைவியும் சேர்ந்து ஓர் உறுதிமொழி பத்திரமும் எழுதி கொடுத்தார்கள் என்றும், பிரதிவாதியிடம் அசல் மற்றும் வட்டியை செலுத்தக்கோரி நேரிலும், ஆட்கள் மூலமும் துயர்ந்தும் பிரதிவாதி யாதொரு தொகையும் செலுத்தாமல் வீண் காலதாமதம் செய்தும் வந்தார் என்றும், இதனால், வாதி 10.04.2024ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதை பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திரும்ப அனுப்பப்பட்டது என்றும், எனவே பிரதிவாதி பெற்ற கடன் தொகையை வட்டியுடன் திரும்ப வாதிக்கு செலுத்த கோரி இவ்வழக்கு தாக்கல்.

**2. பிரதிவாதி தரப்பில் எதிர் வழக்குரை சுருக்கம்:**

இவ்வழக்கு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், எடுத்த எடுப்பிலே தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று என்றும், பிரதிவாதி 30.07.2021ல் 3% வட்டியில் ரூ.50,000/– வாதியிடம் பெற்று, அதற்கு நிரப்பப்படாத ஒரு புரோநோட்டு ஏற்படுத்திக் கொடுத்தார் என்றும், 13.09.2021ல் ரூ.30,000/–மும், 27.10.2021ல் ரூ.50,000/–மும் பெறப்பட்டும், அன்றைய தேதியில் ரூ.50,000/–க்கு நிரப்பப்படாத பத்திரம் ஒன்று கொடுக்கப்பட்டது என்றும், மேலும் 27.10.2021ல் ரூ.1,70,000/– பெறப்பட்டும், ஆக மொத்தம் ரூ.3,00,000/–த்திற்கு கடந்த 30.07.2021ல் பிரதிவாதி பூர்த்தி செய்யாமல் கொடுத்த புரோநோட்டு மற்றும் 27.10.2021ல் பிரதிவாதி கொடுத்த நிரப்பப்படாத



S CHANDRA SEKAR
Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2026.08.11 17:58:06 +0530

பத்திரத்தை வாதி வைத்துக் கொண்டிருந்த நிலையில், பிரதிவாதி மாதம் மாதம் ரூ.9,000/- வட்டி கொடுத்து வந்த நிலையில், கடந்த 16.06.2023ல் SBI தேவதானப்பட்டி வங்கி கிளையில் ATM மெஷினில் வாதியின் வங்கி கணக்கு எண்.11293751813க்கு ரூ.49,000/- வீதம் 2 தவணைகளாவும் மற்றும் ரூ.2,000/-மும் ஆக மொத்தம் ரூ.1,00,000/- வாதிக்கு செலுத்தப்பட்டுள்ளது என்றும், அதனை தொடர்ந்து 28.02.2024ல் தேவதானப்பட்டி வங்கி கிளையில் வாதியின் மேற்கண்ட வங்கி கணக்கிற்கு ரூ.2,00,000/- செலுத்தப்பட்டு, வாதியிடம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த புரோநோட்டையும், பத்திரத்தையும் திருப்பிக் கேட்டதற்கு வாதி திருப்பி தருவதாக கூறி வீண் காலம் கடத்தி வந்து, 28.03.2024ல் வத்தலக்குண்டு பஸ் நிலையத்தில் வைத்து கூடுதல் வட்டி தொகை கோரி வாதி வீரமணி என்பவருடன் வந்து பிரதிவாதியிடம் பிரச்சனை செய்ததால், பிரதிவாதி 29.03.2024ல் வத்தலகுண்டு காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்ட நிலையில், மேற்படி புகாரில் காவல்துறையினர் நடவடிக்கை எடுக்காததால், 15.04.2024ல் தமிழ்நாடு காவல்துறைக்கு ஆன்லைன் மூலம் புகார் அளிக்கப்பட்டு, அதற்கு மனு ரசீது எண்.384/2024ன் கீழ் பதியப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும், வாதி பிரதிவாதியிடம் வாங்கி வைத்திருந்த புரோட்நோட் மற்றும் பத்திரத்தை பின்னிட்டு நிரப்பி வைத்துக்கொண்டு, 10.04.2024ல் பிரதிவாதியின் குடியிருப்பு முகவரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பாமல், பிரதிவாதி பணியில் இருக்கும் விலாசத்திற்கு வேண்டுமென்றே அறிவிப்பு அனுப்பட்டதால் அறிவிப்பு காலதாமதமாக கிடைத்தால் 10.05.2024ல் பதில் அறிவிப்பு அனுப்பப்பட்ட நிலையில், அந்த பதில் அறிவிப்பினை பிராதில் வாதி குறிப்பிடவில்லை என்றும், 27.10.2021ல் பிரதிவாதி மற்றும் அவரது மனைவி சேர்ந்து வாதியிடம் ரூ.3,00,000/- கடன் பெற்றதாக 10.04.2024ல் அறிவிப்பு அனுப்பப்பட்டு, அதன்படி கனம் பெரியகுளம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மு.வ.எண்.54/2024 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது



S CHANDRA SEKAR
Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2026.08.11 17:58:13 +0530

என்றும், பிரதிவாதி நிரப்பப்படாமல் கொடுத்திருந்த புரோநோட்டு மற்றும் பத்திரத்தினை பின்னிட்டு உற்பத்தி செய்து இரண்டு வழக்குகளையும் தாக்கல் செய்துள்ளார் என்றும், புரோநோட்டு மற்றும் உறுதிமொழி பத்திரத்தில் உள்ள கையொப்பத்தினை பரிசோதனைக்கு அனுப்பும் உரிமையினை பிரதிவாதி தக்க வைத்துக் கொள்கிறார் என்றும், பிரதிவாதியிடம் அதிக பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வாதி தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், வாதியின் பிராதில் கண்ட தொகைகளை ஏற்கனவே பிரதிவாதி செலுத்திவிட்டார் என்றும், எனவே, இவ்வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிர் வழக்குரைக்கப்பட்டுள்ளது.

3. <u>இவ்வழக்கில் தீர்வு காணவேண்டி 25.02.2025 வனையப்பட்ட எழுவினாக்கள் யாதெனில்:</u>

1. தாவா புரோநோட்டு பிரதிவாதியால் அதில் கண்ட சரியான மறுபிரயோஜன தொகைக்கு ஏற்படுத்தி கொடுக்கப்பட்டதா?
2. வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கக் கூடியதா?
3. வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?

வாதி தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 வரை விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.1 விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இருதரப்பு ஆவணங்கள் பரிசீலக்கப்பட்டன. வாதுரைகள் கேட்கப்பட்டன.

5. <u>எழுவினாக்கள் 1 மற்றும் 2ற்கான தீர்வு:</u>

கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் தனது எழுத்து மூல வாதுரையில், பிரதிவாதி கோரியதின்படி 02.02.2022ல் வா.சா.2 முன்னிலையில் பிரதிவாதி



S CHANDRA SEKAR
Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2026.08.11 17:58:20 +0530

வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 ஏற்படுத்திக் கொடுத்து ரூ.100/–க்கு ரூ.1.00/– மாத வட்டியில் ரூ.3,00,000/– கடன் பெற்றார் என்றும், அதன் பின்னர், பிரதிவாதி அசல் மற்றும் வட்டியினை திரும்ப செலுத்தவில்லை என்றும், அதனால் வாதி பலமுறை அசல் மற்றும் வட்டியினை திரும்ப செலுத்த கோரியும் பிரதிவாதி ஏற்கதகாத காரணங்கள் கூறி காலம் கடத்தி வந்ததால் வாதி அளித்த வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பினை பிரதிவாதி வேண்டுமென்ற பெற்றுக்கொள்ளாமல் வா.சா.ஆ.4–ன் மூலம் திருப்பப்பட்டது என்றும், அதன்பின்னர் பிரதிவாதி அசல் மற்றும் வட்டியினை திரும்ப செலுத்தவில்லை என்றும், பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள வங்கி கணக்கில் செலுத்தப்பட்ட ரூ.3,00,000/– பி.வா.சா.ஆ.7 வழக்கிற்கானது என்றும், எனவே வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என வாதி தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

6. கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், பிரதிவாதி 30.07.2021ல் 3% வட்டியில் ரூ.50,000/– வாதியிடம் பெற்று, அதற்கு நிரப்பப்படாத ஒரு புரோநோட்டு ஏற்படுத்திக் கொடுத்தார் என்றும், 13.09.2021ல் ரூ.30,000/–மும், 27.10.2021ல் ரூ.50,000/–மும் பெறப்பட்டு அன்றைய தினத்தில் நிரப்பப்படாத பத்திரம் ஒன்று கொடுக்கப்பட்டது என்றும், மேலும் 27.10.2021ல் ரூ.1,70,000/– பெறப்பட்டு, ஆக மொத்தம் ரூ.3,00,000/–த்திற்கு கடந்த 30.07.2021ல் பிரதிவாதி பூர்த்தி செய்யாமல் கொடுத்த புரோநோட்டு மற்றும் 27.10.2021ல் பிரதிவாதி கொடுத்த நிரப்பப்படாத பத்திரத்தை வாதி வைத்துக் கொண்டிருந்த நிலையில், பிரதிவாதி மாதம் மாதம் ரூ.9,000/– வட்டி கொடுத்து வந்த நிலையில், கடந்த 16.06.2023ல் வாதியின் வங்கி கணக்கிற்கு ரூ.1,00,000/–மும், 28.02.2024ல் ரூ.2,00,000/–மும் செலுத்தப்பட்டு, கடன் தொகை முழுவதும் முடிக்கப்பட்ட நிலையில், வாதியிடம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த புரோநோட்டையும், பத்திரத்தையும் திருப்பிக் கேட்டதற்கு வாதி திருப்பி



S CHANDRA SEKAR

Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2026.08.11 17:58:27 +0530

தருவதாக கூறி வீண் காலம் கடத்தி வந்து, 28.03.2024ல் வத்தலக்குண்டு பஸ் நிலையத்தில் வைத்து கூடுதல் வட்டி தொகை கோரி வாதி வீரமணி என்பவருடன் வந்து பிரதிவாதியிடம் பிரச்சனை செய்ததால், பிரதிவாதி அளித்த பி.வா.சா.ஆ.5 புகாருக்கு நடவடிக்கை எடுக்காததால், பி.வா.சா.ஆ.6 புகார் அளிக்கப்பட்டு, அதற்கு பி.வா.சா.ஆ.8 ரசீது வழங்கப்பட்டது என்றும், வாதி பிரதிவாதியிடம் வாங்கி வைத்திருந்த புரோட்நோட் மற்றும் பத்திரத்தை பின்னிட்டு நிரப்பி வா.சா.ஆ.3 அறிவிப்பு பிரதிவாதியின் குடியிருப்புக்கு அனுப்பாமல், பிரதிவாதி பணியில் இருக்கும் விலாசத்திற்கு வேண்டுமென்றே அறிவிப்பு அனுப்பட்டதால் அறிவிப்பு காலதாமதமாக கிடைத்தால் 10.05.2024ல் பி.வா.சா.ஆ.2 பதில் அறிவிப்பு அனுப்பப்பட்ட நிலையில், அந்த பதில் அறிவிப்பினை பிராதில் வாதி குறிப்பிடவில்லை என்றும், பி.வா.சா.ஆ.3, பி.வா.சா.ஆ.4 வேறு தொகையாக குறிப்பிட்டு, பி.வா.சா.ஆ.7 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, இவ்வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டும் என எடுத்துரைக்கப்பட்டது.

7. பிரதிவாதி தனது அவசர குடும்பச் செலவுக்காகவும், கடன் அடைப்பதற்காக ரூ.100/-க்கு ரூ.1/- மாத வட்டியில் ரூ.3,00,000/- கடன் பெற்றதை நிரூபிக்க வாதி தரப்பில் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2-னை தாக்கல் செய்துள்ளார். மேலும், வா.சா.ஆ.1-னை ஆராய்கையில், அது 02.02.2022-ம் தேதிய ரூ.3,00,000/-த்திற்கான புரோநோட்டு அசலாகும். மேலும், வா.சா.ஆ.1-ல் பிரதிவாதி தனது குடும்ப தேவைக்காகவும், கடன் அடைப்பதற்காகவும் வாதியிடம் ரூ.100/-க்கு ரூ.1.00/- மாத வட்டியில் 02.02.2022-ல் ரூ.3,00,000/- கடன் பெற்று அதற்கு ஆதரவாக வா.சா.ஆ.1 ஏற்படுத்தி கொடுத்தாக உள்ளது. மேலும், வா.சா.ஆ.1-ல் கறுநிலை திருத்தங்கள் (Material Alteration) எதுவும்



S CHANDRA SEKAR
Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2026.08.11 17:58:33 +0530

காணப்படவில்லை. மேலும், வா.சா.ஆ.2னை ஆராய்கையில், அது 02.02.2022 தேதிய உறுதிமொழி பத்திர அசலாகும். மேலும், வா.சா.ஆ.2ல் வா.சா.ஆ.1ன் மூலம் பெற்ற ரூ.3,00,000/– கடனை உறுதி செய்து பிரதிவாதியும், அவரது மனைவியும் சேர்ந்து வாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்ததாக உள்ளது. மேலும், பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில், வாதியிடம் 30.07.2021ல் ரூ.50,000/– பெறும்பொழுது நிரப்பப்படாமல் ஏற்படுத்திக் கொடுத்த புரோநோட்டை பின்னிட்டு நிரப்பி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளார். மேலும் இவ்வழக்கு மற்றும் மு.வ.எண்.54/2024 வழக்கில் கண்டவாறு இரண்டு கடன்கள் பெறவில்லை என்றும், ஒரே கடன் பெறப்பட்டதாக பிரதிவாதி தரப்பில் கட்சி செய்யப்படுகிறது. அவ்வாறு உள்ள நிலையில், பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் கூறிய நிரப்பப்படாத புரோநோட்டு என்பது இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.1யை குறித்து கூறுகிறாரா? என ஆராய்கையில், பி.வா.சா.ஆ.3, பி.வா.சா.ஆ.7னை பரிசீலிப்பது அவசியம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

8. மேலும், பி.வா.சா.ஆ.7னை ஆராய்கையில், அது மு.வ.எண்.54/2024 பிராது சார்வு நகலாகும். மேலும், பி.வா.சா.ஆ.3னை ஆராய்கையில், அது மு.வ.எண்.54/2024 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட புரோநோட் சான்றிட்ட நகலாகும். மேலும், பி.வா.சா.ஆ.7 வழக்கானது இவ்வழக்கின் வாதியால் பிரதிவாதி மற்றும் அவரது மனைவி மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், பி.வா.சா.ஆ.3னை ஆராய்கையில், அதில் பிரதிவாதி மற்றும் அவரது மனைவி சேர்ந்து புரோநோட்டு ஏற்படுத்தி கையொப்பம் செய்துள்ளனர். ஆனால் வா.சா.ஆ.1 ஆனது பிரதிவாதியால் மாத்திரம் ஏற்படுத்தி கையொப்பம் செய்யப்பட்டதாக உள்ளது. மேலும், பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில், தான் மட்டும்



S CHANDRA SEKAR
Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2026.08.11 17:58:41 +0530

புரோநோட்டில் கையொப்பம் செய்து வாதியிடம் வழங்கியதாக கூறியுள்ளார். எனவே, மு.வ.எண்.54/2024 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட புரோநோட்டு பிரதிவாதி மற்றும் அவரது மனைவியால் சேர்ந்து ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளமையால், பிரதிவாதி தான் கையொப்பம் செய்து கொடுத்ததாக கூறும் புரோநோட்டு என்பதை வா.சா.ஆ.1யை தான் குறிப்பிட்டு கூறியுள்ளார் என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் என்பதை தான் தனது எதிர்வழக்குரையில் ஒப்புக்கொண்டு நிரப்பப்படாமல் ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாக கட்சி செய்துள்ளார் என இந்நீதிமன்றம் கருதுகிறது. அதன்படி வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9. 30.07.2021ல் பிரதிவாதி பெற்ற ரூ.50,000/- கடனிற்கு ஏற்படுத்திக் கொடுத்த வா.சா.ஆ.1யை வாதி பூர்த்தி செய்து, இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வாதியிடம் பெற்ற ரூ.3,00,000/- கடனை ஏற்கனவே பைசல் செய்துவிட்டதாக பிரதிவாதி தரப்பில் கட்சி செய்யப்படுகிறது. மாறாக, பிரதிவாதி வங்கியில் செலுத்திய ரூ.3,00,000/- பி.வா.சா.ஆ.7 வழக்கு சம்மந்தப்பட்டது என்றும், வா.சா.ஆ.1ன் மூலம் பிரதிவாதி ரூ.3,00,000/- கடன் பெற்றதாக வாதி தரப்பில் கட்சி செய்யப்படுகிறது. மேலும், பிரதிவாதி வாதியின் வங்கி கணக்கில் ரூ.3,00,000/- தொகை செலுத்தியுள்ளார் என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளாகும். அவ்வாறு உள்ள நிலையில், பிரதிவாதி வாதியிடம் ரூ.3,00,000/- மாத்திரம் கடன் பெற்றாரா? அல்லது இரண்டு வழக்குகளில் கண்ட ரூ6,00,000/- கடன் பெற்றாரா? என்பது குறித்து ஆராய்கையில், பி.வா.சா.ஆ.7 பிரதிவாதி செலுத்திய ரூ3,00,000/- தவிர்த்து பாக்கி வட்டிக்கு மாத்திரம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக உள்ளது. மேலும், பிரதிவாதி தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.5 புகாரில் வாதியிடம்



S CHANDRA SEKAR
Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2026.08.11 17:58:50 +0530

ரூ.2,00,000/- மற்றும் ரூ.4,00,000/- என மொத்தம் ரூ.6,00,000/- கடன் பெற்றதாகவும், அதற்கு பிராது மற்றும் புகாரில் கண்ட 3% வட்டியான ரூ.18,000/- வட்டி செலுத்தியதாக கூறியுள்ளார். அவ்வாறு பிரதிவாதி அளித்த பி.வா.சா.ஆ.5 புகாரிலேயே ரூ.6,00,000/- கடன் பெற்றவாறு குறிப்பிட்டு ரூ.18,000/- வட்டி வழங்கியதாக ஒப்புக்கொண்டுள்ள நிலையில், பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில், மொத்தம் ரூ.3,00,000/- மாத்திரம் கடன் பெற்றதாக குறிப்பிடுவது முற்றிலும் ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. மேலும் கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், வா.சா.ஆ.1ற்கு தொகை வழங்கப்படவில்லை என வா.சா.1 தனது குறுக்குவிசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளமையால், வா.சா.ஆ.1 மறுபிரயோஜனமின்றி ஏற்பட்டதாக எடுத்துரைத்தார். ஆனால் வா.சா.1ன் குறுக்குவிசாரணையை ஆராய்கையில், அதில் வா.சா.ஆ.1 ஏற்படும் சமயம் பணம் கொடுக்கவில்லை என கூறியிருந்தாலும், அதன் முழு தொடரினை ஆராய்கையில், வா.சா.ஆ.1 ஏற்படுத்தப்பட்டு அதன்பின்னர் அதே தினத்தில் வா.சா.ஆ.2 ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட பின்னர் தான் கடன் கொடுத்ததாகவும், வா.சா.ஆ.1 ஏற்படுத்தப்பட்ட உடனே கடன் வழங்கப்படவில்லை என்று தான் சாட்சியமளித்துள்ளார். மேலும், ஒரு சாட்சியத்தினை அதன் முழு தன்மையுடன் தான் பரிசீலிக்க வேண்டுமே தவிர அதில் உள்ள ஒரு சொற்றொடரை மாத்திரம் வைத்து ஆராயப்பட இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, வா.சா.1 தனது குறுக்குவிசாரணையில், வா.சா.ஆ.1க்கு பின்னர் வா.சா.ஆ.2 ஏற்படுத்தப்பட்ட பின்னர் கடன் கொடுக்கப்பட்டதாகவும், வா.சா.ஆ.1 ஏற்பட்ட உடன் பணம் கொடுக்கப்படவில்லை என கூறியுள்ளதால் மாத்திரம் வா.சா.ஆ.1 மறுபிரயோஜனமின்றி ஏற்படுத்தப்பட்டதாக பிரதிவாதி தரப்பில் குறிப்பிடுவது முற்றிலும் ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.



S CHANDRA SEKAR

Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2026.08.11 17:58:56 +0530

11. மேலும், வா.சா.ஆ.1 சரியான மறுபிரயோஜனத்திற்கு ஏற்படுத்தப்பட்டது என்பதை நிரூபிக்க அதில் கண்ட சாட்சி வாதி தரப்பில் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். மேலும், வா.சா.2 தனது சாட்சியத்தில், வாதி வழங்கிய கடனிற்காக தான் சாட்சி கையொப்பம் செய்ததாக சாட்சியமளித்துள்ளார். மேலும், வா.சா.2 தனது குறுக்குவிசாரணையில், வா.சா.ஆ.1னை பிரதிவாதி கடன் எதுவும் பெறாமல் ஏற்படுத்திக் கொடுத்ததாக எவ்வித முரண் சாட்சியமும் அளிக்கவில்லை. மாறாக வா.சா.ஆ.1 ஏற்பட்ட தேதியில் தான் பிரதிவாதி கடன் பெற்றதாக குறிப்பாக சாட்சியமளித்துள்ளார். ஆனால் கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2, பி.வா.சா.ஆ.3, பி.வா.சா.ஆ.4 ஒரே நாளில் ஏற்பட்டதாக கூறியுள்ளமையால், வா.சா.ஆ.1ன் படி கடன் வழங்கப்பட்டதாக வாதி தரப்பில் குறிப்பிடுவது ஏற்புடையதல்ல என எடுத்துரைத்தார். மேலும், வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில், வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2, பி.வா.சா.ஆ.3, பி.வா.சா.ஆ.4ல் கண்ட அனைத்து கையெழுத்துகளும் ஒரே சமயத்தில் போடப்பட்டதாக கூறியுள்ளார். ஆனால் வா.சா.ஆ.2னை ஆராய்கையில், அது 02.02.2022 தேதிய உறுதிமொழி பத்திரம் ஆகும். மேலும், வா.சா.ஆ.2ல் கண்ட முத்திரை தாளும் 02.02.2022ல் பெறப்பட்டதாக உள்ளது. ஆனால் பி.வா.சா.ஆ.4 உறுதிமொழியானது 27.10.2021ல் ஏற்படுத்தப்பட்டதாக உள்ளது. மேலும் அதில் கண்ட முத்திரை தாளும் 27.10.2021ல் பெறப்பட்டதாக உள்ளது. மேலும், வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.4ல் கண்ட முத்திரை தாள் வரிசைகளை ஆராய்கையிலும், அவை தொடர் வரிசையாக இல்லாமல் முற்றிலும் மாறுபாடாக உள்ளது. எனவே, வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.4 முத்திரை தாள்கள் வெவ்வேறு சமயங்களில் பெறப்பட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளமையால், வா.சா.2ன் சாட்சியத்தின் அடிப்படையில், அவை ஒரே சமயம் ஏற்படுத்தப்பட்டதாக கருதப்பட இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.



S CHANDRA SEKAR
Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2026.08.11 17:59:05 +0530

12. பிரதவாதி தனது எதிர்வழக்குரையில், வா.சா.ஆ.1 மறுபிரயோஜனமின்றி ஏற்பட்டது என கூறியுள்ளார். ஆனால் வா.சா.ஆ.1ல் கண்ட சாட்சியான வா.சா.2 தனது சாட்சியத்தில் வா.சா.ஆ.1ல் கண்ட கடன் தொகையை வாதி பிரதிவாதிக்கு வழங்கியதாக வழக்கிற்கு ஒத்து சாட்சியமளித்துள்ளனர். அவ்வாறு வா.சா.ஆ.1ல் கண்ட கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் என்பதை பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் ஒப்புக்கொண்டுள்ள நிலையிலும், வா.சா.ஆ.1ன் மறுபிரயோஜனம் குறித்து பிரதிவாதி குறிப்பிடும் கட்சியினை நிரூபணம் செய்யாமல் வெறுமனே காரணம் கூறுவதால் மாத்திரம் வா.சா.ஆ.1னை சந்தேகிக்க இயலுமா? என ஆராய்கையில், மாற்றுமுறை ஆவணச்சட்டப்பிரிவு 118–னை இந்நீதிமன்றம் பரிசீலிக்க விரும்புகிறது. மேலும் மேற்கண்ட சட்டப்பிரிவில் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது:

***118. Presumptions as to negotiable instruments**.—Until the contrary **is proved**, the following presumptions shall be made:—*
***(a) of consideration:**—that every negotiable instrument was made or drawn for consideration, and that every such instrument, when it has been accepted, indorsed, negotiated or transferred, was accepted, indorsed, negotiated or transferred for consideration;*
***(b) as to date**:—that every negotiable instrument bearing a date was made or drawn on such date;*
***(c) as to time of acceptance:**—that every accepted bill of exchange was accepted within a reasonable time after its date and before its maturity;*
***(d) as to time of transfer**:—that every transfer of a negotiable instrument was made before its naturity;*
***(e) as to order of indorsements:**—that the indorsements appearing upon a negotiable instrument were made in the order in which they appear then on;*
***(f) as to stamp:**— that a lost promissory note, bill of exchange or cheque was duly stamped;*
***(g) that holder is a holder in due course:**—that the holder of a negotiable instrument is a holder in due course: provided that, where the instrutment has been obtained from its lawful owner, or from any person in lawful custody thereof, by means of an offence or fraud, or has been obtained from the maker or acceptor thereof by means of an offence or fraud, or for unlawful consideration, the burden of proving that the holder is a holder in due course lies upon him.*



S CHANDRA SEKAR
Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2026.08.11 17:59:12 +0530

எனவே, மேற்கண்ட சட்டப்பிரிவின்படி ஒரு புரோநோட்டினை பிரதிவாதி ஏற்படுத்தி கொடுத்துள்ளதை ஒப்புகொள்ளும் பட்சம் அதில் கண்ட தொகை வழங்கப்படவில்லை என்பதை நிரூபணம் செய்ய தவறும் பட்சம் அது சரியான மறுபிரயோஜனத்திற்கு ஏற்பட்டதாக கருதப்படவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இதுகுறித்து பிரதிவாதி தரப்பில் எவ்வித மறுப்பு சாட்சியமும் அளிக்கவில்லை.

13. வாதி தனது பிராதில், வா.சா.ஆ.1ல் கண்ட அசல் மற்றும் வட்டியினை பிரதிவாதி திருப்பி செலுத்தவில்லை என கூறியுள்ளார். மாறாக, பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில், மாத வட்டி ரூ.9,000/-த்தினை முறையாக செலுத்தி வந்ததாகவும், அசல் தொகை ரூ.3,00,000/-த்தினை வாதியின் வங்கி கணக்கில் செலுத்திவிட்டதாக கூறியுள்ளார். ஆனால், பிரதிவாதியால் செலுத்தப்பட்ட ரூ.3,00,000/- பி.வா.சா.ஆ.7 கடனிற்கானது என வாதி தரப்பில் கட்சி செய்யப்படுகிறது. மேலும், பி.வா.சா.ஆ.7 வழக்கிலும் வாதியின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்ட ரூ.3,00,000/- வரவு செய்யப்பட்டு, வட்டிக்காக மாத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், பி.வா.சா.ஆ.5 புகாரில் ரூ6,00,000/- நிலுவை உள்ளதாகவும், அதற்கு ரூ.18,000/- வட்டி ஏற்பட்டதாக கூறியுள்ள நிலையில், பிரதிவாதி செலுத்திய ரூ.3,00,000/- பி.வா.சா.ஆ.7 கடனிற்கு கிடையாது என்றும், அது தாவா கடனிற்கானது என்பதற்கு பிரதிவாதி தரப்பில் எவ்வித சாட்சி மற்றும் சான்றாவணங்கள் முன்னிறுத்தவில்லை. மேலும், பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில், முறையாக வட்டி செலுத்தி வந்ததாக குறிப்பிட்டுள்ளார். ஆனால், இதே பிரதிவாதி அளித்த பி.வா.சா.ஆ.5 புகாரில் தான்னால் வட்டி கட்ட இயலவில்லை என்றும், எனவே, வாதி பிரச்சனை செய்து வந்ததாக கூறியுள்ளார். எனவே, பிரதிவாதி அளித்த பி.வா.சா.ஆ.5 புகாரில் வட்டி செலுத்த இயலவில்லை



S CHANDRA SEKAR
Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2026.08.11 17:59:19 +0530

என கூறியுள்ள நிலையில், அதற்கு முரணாக பிரதிவாதி முறையாக வட்டி செலுத்தியதை நிரூபிக்கும் கடப்பாடு பிரதிவாதிக்கு உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆனால், அவ்வாறு பிரதிவாதி மாதம் முறையாக வட்டி செலுத்தியதற்கு எவ்வித சாட்சி மற்றும் சான்றாவணங்கள் முன்னிறுத்தவில்லை. எனவே, பிரதிவாதி திருப்பி செலுத்தியதாக குறிப்பிடும் ரூ.3,00,000/- பி.வா.சா.ஆ.7 கடனிற்காக உள்ள நிலையிலும், தாவா அசல் மற்றும் வட்டியினை பிரதிவாதி திருப்பி செலுத்திவிட்டதை பிரதிவாதி நிரூபணம் செய்ய தவறியுள்ள நிலையில், பிரதிவாதி அசல் மற்றும் வட்டியினை திருப்பி செலுத்தவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

14. வாதி தனது பிராதில், வா.சா.ஆ.3 அறிவிப்பு பிரதிவாதிக்கு சார்வு ஆகவில்லை என குறிப்பிட்டு வா.சா.ஆ.4னை தாக்கல் செய்துள்ளார். மேலும், வா.சா.ஆ.4னை ஆராய்கையில், அது திருப்பப்பட்ட அஞ்சல் உறையாகும். மேலும், வா.சா.ஆ.4னை பிரதிவாதி பெற்றுக்கொள்ளாததால் திருப்பப்பட்டதாக உள்ளது. ஆனால் வா.சா.ஆ.3ற்கு பிரதிவாதி பதில் அறிவிப்பு அளித்துள்ளார் என்பதை நிரூபிக்க பி.வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.2னை தாக்கல் செய்துள்ளார். மேலும், பி.வா.சா.ஆ.2னை ஆராய்கையில், அது 09.05.2024 தேதிய பதில் அறிவிப்பு ஆகும். மேலும், பி.வா.சா.ஆ.1னை ஆராய்கையில், அது பதில் அறிவிப்பினை வாதி பெற்றுக்கொண்டமைக்கான அஞ்சல் ஒப்புதல் அட்டையாகும். மேலும், கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், பி.வா.சா.ஆ.2 பதில் அறிவிப்பினை வாதி வேண்டுமென்றே மறைத்துள்ளதாக எடுத்துரைத்தார். ஆனால் பிராதில், பிரதிவாதி பதில் அறிவிப்பு அளிக்கவில்லை என பிரதிவாதி மீது பழி சுமத்தி கூறப்படவில்லை. மாறாக, வா.சா.ஆ.4ன் மூலம் திருப்பப்பட்டதாக மாத்திரமே கூறியுள்ளனர். எனவே, பதில் அறிவிப்பு குறித்து பிராதில் கூறாததால் வாதியின் வழக்கு நிலைக்கதக்கதல்ல



S CHANDRA SEKAR
Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2026.08.11 17:59:24 +0530

என பிரதிவாதி தரப்பில் குறிப்பிடுவது ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. எனவே, வா.சா.ஆ.1 பிரதிவாதியால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதை பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ள நிலையிலும், வா.சா.ஆ.1 சரியான மறுபிரயோஜனத்திற்கு பிரதிவாதியால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதாக அதில் கண்ட சாட்சியான வா.சா.2 வழக்கிற்கு ஒத்து சாட்சியமளித்துள்ள நிலையிலும், மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 118—ன் கீழ் வா.சா.ஆ.1 ஏற்பட்டதை பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ள நிலையில், அதற்கு முரணாக முன்னிருத்தப்படும் கட்சியினை நிரூபிக்கும் கடப்பாடு பிரதிவாதியை சென்றடைந்துள்ள நிலையில், வா.சா.ஆ.1 சரியான மறுபிரயோஜனத்திற்கு ஏற்படவில்லை என்பதை பிரதிவாதி நிரூபணம் செய்ய தவறியுள்ள நிலையிலும், பிரதிவாதி குறிப்பிடும் ரூ.3,00,000/— பைசல் தொகை பி.வா.சா.ஆ.7 வழக்கிற்கானதாக உள்ள நிலையிலும், பி.வா.சா.ஆ.5 புகாரிலேயே பிரதிவாதி வட்டி செலுத்தவில்லை என்பதை ஒப்புக்கொண்டுள்ள நிலையிலும், அதற்கு முரணாக பிரதிவாதி அசல் மற்றும் வட்டியினை திரும்ப செலுத்தவிட்டதாக எவ்வித சாட்சி மற்றும் சான்றாவணங்கள் முன்னிறுத்தாத நிலையில், வா.சா.ஆ.1 பிரதிவாதியால் சரியான மறுபிரயோஜனத்திற்கு ஏற்படுத்தப்பட்டதை வாதி நிரூபித்துள்ளமையால், வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்ககூடியது என இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே இவ்வெழுவினாக்கள் வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது.

16. <u>எழுவினா 3—ற்கான தீர்வு:</u>

வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைத்துள்ளமையால் வாதிக்கு யாதொரு இதர பரிகாரமும் வழங்க தேவையில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே இவ்வெழுவினா தீர்வு காணப்படுகிறது.



S CHANDRA SEKAR
Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2026.08.11 17:59:30 +0530

**இறுதியாக,** பிரதிவாதி வாதிக்கு ரூ.3,84,000/–ம், அசல் தொகை ரூ.3,00,000/–த்திற்கு பிராது தாக்கல் செய்த தேதி முதல் தீர்ப்பாணை தேதிவரை ஆண்டொன்றுக்கு 9% பின்வட்டியுடனும், தீர்ப்பாணை தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரை ஆண்டொன்றுக்கு 6% பின்வட்டியுடன் திருப்பி செலுத்த வேண்டும் என்றும் வாதியின் செலவுத்தொகையுடன் வழக்கு அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

*இந்த தீர்ப்புரை என்னால் சருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்ட பின் 2026ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ஆம் நாள் செவ்வாய்கிழமை இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.*

S CHANDRA SEKAR
Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2026.08.11 17:59:37 +0530

**சார்பு நீதிபதி,**
**பெரியகுளம்.**

**<u>வாதி(கள்) தரப்பு சாட்சிகள்:</u>**

வா.சா.1 – காமாட்சி (வாதி).

வா.சா.2 – முருகன்

**<u>வாதி(கள்) தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| வரிசை எண். | தேதி | ஆவணம் | தன்மை |
|---|---|---|---|
| **வா.சா.ஆ.1.** | 02.02.2022 | புரோநோட் | அசல் |
| **வா.சா.ஆ.2.** | 02.02.2022 | உறுதிமொழி பத்திரம் | அசல் |
| **வா.சா.ஆ.3.** | 10.04.2024 | வழக்கறிஞர் அறிவிப்பு | அசல் |
| **வா.சா.ஆ.4.** | | பிரதிவாதிக்கு சார்பு ஆகாமல் திருப்பப்பட்ட அஞ்சல் உறை | அசல் |

**<u>பிரதிவாதி(கள்) தரப்பு சாட்சிகள்:</u>**

பி.வா.சா.1 – குமரேசன் (பிரதிவாதி).

**<u>பிரதிவாதி(கள்) தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| வரிசை எண். | தேதி | ஆவணம் | தன்மை |
|---|---|---|---|
| **பி.வா.சா.ஆ.1.** | 10.05.2024 | பதில் அறிவிப்பினை பெற்றுக்கொண்டமைக்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை | அசல் |
| **பி.வா.சா.ஆ.2.** | | பதில் அறிவிப்பு | அசல் |
| **பி.வா.சா.ஆ.3.** | 27.10.2021 | புரோநோட் | சான்றிட்ட நகல் |
| **பி.வா.சா.ஆ.4.** | 27.10.2021 | உறுதிமொழி பத்திரம் | சான்றிட்ட நகல் |
| **பி.வா.சா.ஆ.5.** | 29.03.2024 | புகார் மனு | நகல் |
| **பி.வா.சா.ஆ.6.** | 15.04.2024 | புகார் ஏற்பு மனு | கணினி நகல் |
| **பி.வா.சா.ஆ.7.** | | பெரியகுளம் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற மு.வ.எண்.54/2024 பிராது | நகல் |
| **பி.வா.சா.ஆ.8.** | 16.04.2024 | புகார் ஏற்பு மனு | அசல் |

**<u>நீதிமன்றம் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>** இல்லை.

S CHANDRA SEKAR
Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2026.08.11 17:59:43 +0530

**சார்பு நீதிபதி,**
**பெரியகுளம்.**

**Sub Court, Periyakulam.**
**OS.84/2024**
**Judgment – AFT**
**Fair/ Draft**
**Date 11.08.2026.**